Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurall@gmail.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

RS Polyclinic
OUR ESTEEMED DOCTORS

மலர் 3 | சென்னை | தினசரி | 4 பக்கம் | புதன், செப்டம்பர் 09, 2026 | இதழ் 149

## வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக் கூட்டம் முதலமைச்சர் தலைமையில் நடைபெற்றது

சென்னை, 09 செப்டம்பர் 2026: தமிழ்நாடு முதலமைச்சர் விஜய் அவர்கள் தலைமையில் இன்று (8.9.2026) தலைமைச் செயலகத்தில், வடகிழக்குப் பருவமழையை முன்னிட்டு மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர், விழுப்புரம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் வடகிழக்குப் பருவமழையின்போது, எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சியின் அனைத்து மண்டலங்களுக்கும், வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கைப் பணிகளை ஒருங்கிணைந்து மேற்கொள்ள ஏதுவாக, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் தலைமையில் மூத்த இந்திய ஆட்சிப் பணி அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இக்கூட்டத்தில், தமிழ்நாடு முதலமைச்சர் கடந்த பருவமழைக் காலங்களில் வெள்ளம் பாதித்த இடங்கள் மற்றும் ஏனைய பகுதிகளில் நடைபெறும் பணிகளை மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் உயர் அலுவலர்களைக் கொண்ட குழுவினர் வாரம் இருமுறையாவது ஆய்வுசெய்து பருவமழையை எதிர்கொள்ளும் வகையில் தயார்நிலையில் வைத்திருக்க வேண்டும் என்றும், ஆய்வின்போது கண்டறியப்பட்ட குறைபாடுகளைக் களைந்திடும் வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

மேலும், வடகிழக்குப் பருவமழை முன்னேற்பாட்டுப் பணிகள் தொடர்பாக அனைத்து மாவட்டங்களிலும், அனைத்துத் துறை அலுவலர்களைக் கொண்ட ஒருங்கிணைப்புக் கூட்டம் நடத்தப்பட வேண்டும் என்றும், பெருநகர சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரை, மாநகராட்சி நிர்வாகம், சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, மீன்வளத்துறை மற்றும் மின்சார வாரியம், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் ஆகியவை ஒருங்கிணைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்தார்.



அத்துடன், மழைநீர் விரைவாக வெளியேறும் வகையில் நீர் நிலைகளில் ஆகாயத் தாமரை அகற்றப்படுவதோடு, கால்வாய்கள் மற்றும் மழைநீர் வடிகால்களைத் தூர்வாருவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், வடகிழக்குப் பருவமழை தொடங்குவதற்கு முன்பாக நிறைவுபெறாமல் இருக்கும் குடிநீர், கழிவுநீர்க் கால்வாய்கள், மற்றும் சாலைப் பணிகளை உடனடியாகச் செய்து முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்.

மேலும், அறுந்து விழக்கூடிய நிலையில் உள்ள மின் கம்பிகள், பலவீனமான மின் கம்பங்கள் ஆகியவற்றை உடனடியாக மின்துறையினர் சீரமைக்க வேண்டுமென்றும், மழைக்காலங்களில் மின் கம்பிகளால் எவ்வித உயிர்ச்சேதமும் ஏற்படாத வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

கடந்த காலங்களில்

சாலைகளில் வெள்ளநீர் அதிகம் தேங்கிய பகுதிகளுக்கு நேரில் சென்று ஆய்வு செய்து, வெள்ள நீர் தேங்காதவாறு உரிய நடவடிக்கை எடுத்திட வேண்டும் என்றும், வெள்ள நீரை உடனடியாக வெளியேற்ற மின் மோட்டார்கள் மற்றும் சாலைகளில் விழுந்த மரங்களை அப்புறப்படுத்த மின் ரம்பங்கள், ஜேசிபி போன்றவற்றையும், மழைநீர் தேங்கும் குடியிருப்புப் பகுதிகளில் உள்ள மக்களைப் பாதுகாப்பாக வெளியேற்றும் வகையில் படகுகளையும் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார். மேலும், தாழ்வான பகுதிகளில் வசிப்பவர்களைப் பாதுகாப்பாகத் தங்கவைப்பதற்கு ஏது வாக சமூக நலக்கூடங்கள், பள்ளிகள் ஆகியவற்றைத் தயார்நிலையில் வைத்திருக்க வேண்டும் என்றும், முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களுக்கு உணவு மற்றும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கிடும் வகையில் சமுதாய உணவுக் கூடங்கள் தயார்நிலையில் வைத்திருக்கப்பட வேண்டும் என்றும் தமிழ்நாடு முதலமைச்சர் அறிவுறுத்தினார்.

## தமிழகத்திற்கு 6,000 கன அடி வீதம் நீர் திறக்க வேண்டும் - கர்நாடகாவிற்கு காவிரி மேலாண்மை ஆணையம் உத்தரவு

சென்னை 09, செப்டம்பர் 2026: காவிரி ஆற்றில் இருந்து தமிழ்நாட்டுக்கு தண்ணீர் திறக்க கர்நாடகாவுக்கு காவிரி மேலாண்மை ஆணையம் உத்தரவிட்டு உள்ளது. டெல்லியில் நடைபெற்ற காவிரி மேலாண்மை ஆணைய கூட்டத்தில் கர்நாடகாவுக்கு இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டு உள்ளது. 15 நாட்கள் வினாடிக்கு 6,000 கன அடி நீர் திறக்க காவிரி மேலாண்மை ஆணையம், கர்நாடக அரசுக்கு உத்தரவிட்டு உள்ளது. முன்னதாக இன்று நடைபெற்ற காவிரி நீர் ஒழுங்காற்று குழு கூட்டத்தில், தமிழ்நாட்டிற்கு காவிரியிலிருந்து விநாடிக்கு 6,000 கன அடி வீதம் தண்ணீர் திறக்க கர்நாடக அரசுக்கு உத்தரவிட பரிந்துரை செய்யப்பட்டது. வினீத் குப்தா தலைமையில் நடைபெற்ற காவிரி நீர் ஒழுங்காற்று குழுவின் கூட்டத்தில் இந்த பரிந்துரை முடிவு எடுக்கப்பட்டது.

இந்த பரிந்துரையை தொடர்ந்து, தமிழ்நாட்டுக்கு 6000 கன அடி வீதம் அடுத்த 15 நாட்களுக்கு நீர் திறக்க கர்நாடகாவுக்கு காவிரி மேலாண்மை ஆணையம் உத்தரவு பிறப்பித்து உள்ளது. கூடுதல் நீர் திறக்க தமிழ்நாடு அரசுத் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்த நிலையில், ஒழுங்காற்றுக் குழுவின் பரிந்துரையை ஏற்று இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டு உள்ளது.

## தனியார் பல்கலைக் கழகங்கள் அமைப்பதற்காக நிலம், அறக்கட்டளை நிதியை குறைக்க சட்டத் திருத்த மசோதா: சட்டசபையில் தாக்கல்



சென்னை, 09 செப்டம்பர் 2026: தனியார் பல்கலைக் கழகங்கள் அமைப்பதற்காக நிலம் மற்றும் அறக்கட்டளை நிதியை குறைப்பதற்கான சட்டத் திருத்த மசோதா சட்ட சபையில் தாக்கல் செய்யப்பட்டது.தமிழக சட்டசபையில் உயர் கல்வித்துறை அமைச்சர் விஸ்வநாதன் இன்று தனியார் பல்கலைக் கழகம் திருத்த சட்ட முன்வடிவை அறிமுகம் செய்தார். அதில் கூறியிருப்பதாவது: தமிழ்நாட்டில் தனியார் பல்கலைக்கழகத்தை அமைப்பதற்கு 100 ஏக்கருக்கு குறையாத நிலமும், நிர்வாக செலவுகளை சமாளிப்பதற்கு பல்கலைக் கழகம் குறைந்தது 50 கோடி ரூபாய் நிதியில் நிலையான அறக்கட்டளை நிதியத்தை நிறுவ வேண்டும் என்ற நடைமுறை உள்ளது.

இந்த நிலையில் ஒன்றிய அரசு ஒழுங்குமுறை சீர்திருத்தங்கள் செய்வதற்கு பணிக் குழுவை அமைத்தது. இப்பணிக்குழு, தனியார் பல்கலைக் கழகம் அமைப்பதற்கான குறைந்தபட்ச நிலத் தேவையை நீக்குவது குறித்தும் உயர் கல்வி நிறுவனங்களை அமைப்பதற்கான குறைந்தபட்ச அறக்கட்டளை நிதித்தேவையை திருத்தம் செய்வதற்கான பரிந்துரையை வழங்கியது. இந்த பரிந்துரைகளை கவன ஆய்வு செய்து 2019ம் ஆண்டு தமிழ்நாடு தனியார் பல்கலைக்கழகங்கள் சட்டத்தில் திருத்தம் கொண்டு வருவதற்கான சட்டமுன்வடிவை உயர்கல்வி துறை அமைச்சர் விஸ்வநாதன் இன்று தாக்கல் செய்தார்.

இந்த சட்டமுன்வடிவில் பெருநகர சென்னை மாநகராட்சி பகுதியில் நிலப்பற்றாக் குறை கருத்தில் கொண்டு தனியார் பல்கலைக் கழகம் அமைப்பதற்கு குறைந்தபட்சம் 12 ஏக்கர் நிலமும், பிற மாநகராட்சிகள் நகராட்சிகளில் 18 ஏக்கரும் தேவை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி, பிற மாநகராட்சிகள், நகராட்சிகள் தவிர மற்ற பகுதிகளில் தனியார் பல்கலைக் கழகம் அமைக்க 18 ஏக்கர் நிலம் போதுமானது என அரசு முடிவு செய்துள்ளது. இதே போல நிலையான அறக்கட்டளை நிதியை 50 கோடியில் இருந்து 25 கோடியாக குறைக்கவும் அரசு முடிவு செய்து இந்த சட்டத்திருத்தம் கொண்டு வரப்பட்டு உள்ளது.

## அரசு அதிகாரிகள் எவரும் அனுமதிக்கப்படாத கூட்டத்தில் 20 அமைச்சர்களுடன் மோடி தீவிர ஆலோசனை: விரைவில் அமைச்சரவை மாற்றம் நடக்க வாய்ப்பு



சென்னை 09, செப்டம்பர் 2026: பிரதமர் மோடி தலைமையிலான ஒன்றிய பாஜக அரசின் அமைச்சரவையில் விரைவில் அதிரடி மாற்றங்கள் நிகழ உள்ளதாக பரபரப்பு கிளம்பியுள்ளது. ஒன்றியத்தில் பாஜக தலைமையிலான அரசு அமைந்ததில் இருந்தே பல்வேறு துறைகளில் போதிய வளர்ச்சி இன்றி நிர்வாக குளறுபடிகள் நீடித்து வருகின்றன.

குறிப்பாக விவசாயம், கிராமப்புற மேம்பாடு, கல்வி மற்றும் சமூக நீதி ஆகிய முக்கிய துறைகளில் மக்கள் நலத் திட்டங்களை முறையாக செயல்படுத்தாமல் பாஜக அரசு தொடர்ந்து மெத்தனப் போக்கை கடைப்பிடித்து வருவதாக எதிர்கட்சிகள் தொடர்ந்து குற்றச்சாட்டுகள் வைத்து வருகின்றன.

எதிர்வரும் 2029ம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலை எதிர்கொள்ள முடியாமல் ஆளும் பாஜக தலைமை திணறி வரும் சூழலில், மக்கள் மத்தியில் நிலவும் கடும் அதிருப்தியை சமாளிக்க ஒன்றிய பாஜக அரசு அமைச்சரவையை மாற்றி அமைக்க திட்டமிட்டுள்ளது.

இந்த நிலையில், பிரதமர் மோடி தலைமையில் சுமார் 20 இணையமைச்சர்கள் மற்றும் தனிப்பொறுப்பு வகிக்கும் அமைச்சர்களுடனான ஆய்வுக் கூட்டம் டெல்லியில் நேற்று நடந்தது. அரசு அதிகாரிகள் எவரும் அனுமதிக்கப்படாத இந்த கூட்டத்தில், அமைச்சர்களின் செயல்பாடுகள் குறித்த அறிக்கையை வைத்து பிரதமர் மோடி சுமார் 3 மணி நேரத்திற்கும் மேலாக விசாரணை நடத்தினார்.

துறைகளின் ஆக்கப்பூர்வமான செயல்பாடுகளை விட, சமூக வலைதளங்களில் ஒன்றிய அரசுக்கு ஆதரவாக எவ்வாறு பிரசாரம் செய்யப் பட்டது என்பது குறித்தே அமைச்சர்களிடம் அதிகம் கேள்வி எழுப்பப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

மேலும், வரும் 2047ம் ஆண்டு வரையிலான நாட்டின் வளர்ச்சிக்கான திட்டமிடல் குறித்து ஆலோசிக்கப் பட்டதாகவும், வரும் வாரங்களில் மற்ற அமைச்சர்களுடனும் தனித்தனி குழுக்களாக இத்தகைய ஆய்வுகள் தொடரும் என்றும் தெரியவந்துள்ளது.

செயல்திறன் குறைந்த அமைச்சர்களை பதவியில் இருந்து நீக்கிவிட்டு, புதியவர்களை நியமிப்பதன் மூலம் ஆட்சி மீதான அவப்பெயரை மடைமாற்ற பாஜக தலைமை தீவிரமாக காய்நகர்த்தி வருகிறது. எதிர்பார்க்கப்படும் இந்த அதிரடி அமைச்சரவை மாற்றத்தின் போது யார் தப்புவார்கள், யாருடைய பதவி பறிக்கப்படும் என்ற அச்சத்தில் பாஜக தலைவர்கள் கலக்கத்தில் ஆழ்ந்துள்ளனர்.

இதுகுறித்து மூத்த நிர்வாகி ஒருவர் கூறுகையில், ‘அரசு சாதனைகள் குறித்து கூறினாலும் களத்தில் செய்ய வேண்டிய பணிகள் ஏராளமாக தேங்கிக் கிடக்கின்றன; எங்களின் பலவீனங்களை சரிசெய்தால் மட்டுமே இலக்குகளை எட்ட முடியும்.

எதிர்வரும் நாட்களில் அமைச்சரவை மாற்றத் திற்கான அறிவிப்புகள் வரவாய்ப்புள்ளது. கூட்டணி கட்சிகளுக்கும் அப்போது முக்கியத்துவம் கொடுக்கப்படும்’ என்று தெரிவித்தார்.

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி
புதன்,
செப்டம்பர் 09, 2026

# டிராமோன்டினா, ஹெரிடேஜ் அயர்ன் ரகத்தின் மூலம் இந்திய சமையலறைப் பாரம்பரியங்களுக்குப் புத்துயிர் அளிக்கிறது



சென்னை 09, செப்டம்பர் 2026: உலகப் புகழ்பெற்ற வீட்டு உபயோகப் பொருட்கள் பிராண்டான டிராமோன்டினா, இந்திய சமையலறைகளின் தேவைகளை மையமாகக் கொண்டு பிரத்யேகமாக உருவாக்கப்பட்ட அடுத்த தலைமுறை சமையல் பாத்திரங்களின் வரிசையான 'ஹெரிடேஜ் அயர்ன்'-ஐ அறிமுகப்படுத்தியுள்ளது.

இரும்பு சமையல் பாத்திரங்கள் நீண்ட காலமாக இந்திய சமையலின் ஒரு அங்கமாக இருந்து வருகின்றன. அவற்றின் நீடித்து உழைக்கும் தன்மை, வெப்ப செயல்திறன் மற்றும் பல்வேறு சமையல் முறைகளுக்கு ஏற்ற பன்முகத்தன்மை ஆகியவற்றிற்காக அவை மதிக்கப்படுகின்றன. தோசைத் தவாக்கள் மற்றும் கடாய்கள் முதல் அப்பச்செட்டிகள் மற்றும் பிற பாரம்பரிய சமையல் வகைகள் வரை, நாடு முழுவதும் உள்ள சமையலறைகளில் இரும்பிற்குத் தொடர்ந்து ஒரு முக்கிய இடம் உண்டு. அதே நேரத்தில், இன்றைய நுகர்வோர், இந்தப் பரிச்சயமான குணங்களை அதிக நீடித்து உழைக்கும் தன்மை, எளிதான கையாளுதல் மற்றும் சமகால வடிவமைப்புடன் இணைக்கும் சமையல் பாத்திரங்களைத் தேடுகின்றனர்.

பாரம்பரிய மற்றும் நவீன இந்திய சமையல் ஆகிய இரண்டிற்கும் ஏற்றவாறு வடிவமைக்கப்பட்ட இரும்புக் கலவை சமையல் பாத்திரங்களின் வரிசையின் மூலம், ஹெரிடேஜ் அயர்ன் இந்தத் தேவைகளை ஒன்றிணைக்கிறது. இந்தத் தொகுப்பில், பரிச்சயமான இந்திய சமையல் முறைகளுக்கு ஏற்ற சமையல் பாத்திரங்களுடன், வோக் போன்ற சமகால வடிவங்களும் அடங்கும். ஒவ்வொரு பாத்திரமும் செயல்திறன், நீடித்து உழைக்கும் தன்மை மற்றும் அன்றாடப் பயன்பாடு ஆகியவற்றைச் சமநிலைப்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்தத் தயாரிப்பு வரிசையானது, மெருகூட்டப்பட்ட 304 துருப்பிடிக்காத எஃகு கைப்பிடிகள் மற்றும் ரிவெட்டுகள், உறுதிப்படுத்தப்பட்ட கண்ணாடி மூடிகள் மற்றும் நவீன வடிவமைப்பு போன்ற நுணுக்கங்கள் மூலம், பாரம்பரிய சமையல் முறைகளை சமகால சமையலறைகளுக்குக் கொண்டுவருகிறது. வெவ்வேறு சமையல் தேவைகளுக்காக வெவ்வேறு அளவுகள் வடிவமைக்கப்பட்டுள்ளன, இது அன்றாடப் பயன்பாட்டிற்காக வெப்ப செயல்திறன், நீடித்துழைக்கும் தன்மை மற்றும் எடை ஆகியவற்றுக்கு இடையேயான சமநிலையை மேம்படுத்த உதவுகிறது.

நீடித்து உழைக்கும் தன்மையே இத்தொகுப்பின் முக்கிய சிறப்பம்சமாகும். நீண்ட காலம் பயன்படும் வகையிலான சமையல் பாத்திரங்களைத் தயாரிக்கும் பாரம்பரியத்தைத் தொடரும் விதமாக, 'ஹெரிடேஜ் அயர்ன்' வரிசைப் பொருட்கள் 'டிராமான்டினா'வின் வாழ்நாள் உத்தரவாதத்துடன் வருகின்றன; இது, வரும் ஆண்டுகளில் அன்றாட சமையலறைகளின் ஒரு அங்கமாகத் திகழும் வகையிலான வடிவமைப்பைக் கொண்டிருப்பதை உறுதிப்படுத்துகிறது.

ரூ. 2,795 முதல் விலையிடப்பட்டுள்ள 'ஹெரிடேஜ் அயர்ன்' தயாரிப்புகள், டிராமான்டினாவின் இணையதளம், முன்னணி இ-காமர்ஸ் மற்றும் விரைவு வர்த்தக (quick-commerce) தளங்கள், அத்துடன் இந்தியா முழுவதும் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட சில்லறை விற்பனைச் சங்கிலிகள் மற்றும் கடைகள் ஆகியவற்றில் கிடைக்கின்றன.

# 25 இளம் செஸ் வீரர்களின் கனவு நனவானது: மேக்னஸ் கார்ல்சனுடன் நேருக்கு நேர் மோதல்



சென்னை, 09 செப்டம்பர் 2026: கடிகாரங்கள் ஓடத் தொடங்கின. செஸ் பலகைகள் தயார் நிலையில் இருந்தன. மறுபுறம், உலக செஸ்ஸின் மிகப் பெரிய நட்சத்திரங்கள் அமர்ந்திருந்தனர். பெங்களூரு மற்றும் சென்னையைச் சேர்ந்த 13 முதல் 19 வயதுக்குட்பட்ட 25 இளம் செஸ் வீரர்கள் தங்கள் கனவை நனவாக்கும் அரிய வாய்ப்பைப் பெற்றனர். உலகின் நம்பர் 1 வீரரும் ஐந்து முறை உலக சாம்பியனுமான மேக்னஸ் கார்ல்சன், இந்திய செஸ் நட்சத்திரம் கோனேரு ஹம்பி, இந்திய கிராண்ட்மாஸ்டர் விதித் குஜராத்தி மற்றும் இந்திய கிராண்ட்மாஸ்டர் பிரவீன் மகாதேவ் திப்சே ஆகியோரை எதிர்த்து அவர்கள் விளையாடினர். பெங்களூருவிலுள்ள ஐடிசி விண்ட்சர்-இல் நடைபெற்ற யிப்பீ! செக்மேட் சேலஞ்ச் இந்த மறக்க முடியாத தருணத்துக்கு மேடையாக அமைந்தது.

மூன்று கிராண்ட்மாஸ்டர்களுக்கு எதிராக வலுவான பலகை நிலையைத் தக்கவைத்ததற்காக, அல்ஃபைன் ஏபிஎல் பைப்பர்ஸ் அணியின் பயிற்சியாளரான கிராண்ட்மாஸ்டர் பிரவீன் திப்சே, விவான் சச்தேவை யிப்பீ! செக்மேட் சேலஞ்ச்-இன் சிறந்த வீரராகத் தேர்ந்தெடுத்தார். மற்ற இளம் வீரர்களுக்கும் இது ஒவ்வொரு நகர்வும் முக்கியமான சூழலில் தங்கள் திறனைச் சோதித்துப் பார்க்கும் சிறப்பான வாய்ப்பாக இருந்தது. சரியான நகர்வைக் கண்டுபிடிப்பதைக் கடந்த அனுபவம் இது. பதற்றத்தைக் கட்டுப்படுத்துவது, உள்ளுணர்வை நம்புவது, அழுத்தத்திலும் நிதானமாக இருப்பது போன்ற உயர்நிலை செஸ்ஸின் தீவிரத்தை புதிய தலைமுறை வீரர்கள் நேரடியாக உணர்ந்தனர்.

அல்ஃபைன் ஏபிஎல் பைப்பர்ஸ் அணியைச் சேர்ந்த மேக்னஸ் கார்ல்சன் கூறுகையில், "குழந்தைகள் செஸ் விளையாடும்போது அவர்கள் முகத்தில் தெரியும் மகிழ்ச்சியைப் பார்ப்பது எப்போதும் மனதிற்கு இனிமையானது. இங்கிருந்த இளம் வீரர்கள் மிகவும் சிறப்பாக விளையாடினர். போட்டிகளில் அவர்கள் கொண்டு வந்த ஆற்றலும் உழைப்பும் தெளிவாகத் தெரிந்தது. இப்படிப்பட்ட முறையில் செஸ்ஸை விளையாடி அனுபவிக்கும் வாய்ப்பு அவர்களுக்கு கிடைத்தது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது."

இந்த அனுபவம் குழந்தைகளுக்கு வாழ்நாள் முழுவதும் நினைவில் நிற்கும் தருணங்களை அளித்தது. அதே நேரத்தில், அவர்களது பெற்றோர்களுக்கும் பயிற்சியாளர்களுக்கும் இது மிகவும் நெகிழ்ச்சியான நிகழ்வாக அமைந்தது. மேக்னஸ் கார்ல்சன், கோனேரு ஹம்பி மற்றும் திவ்யா தேஷ்முக் போன்ற உலகத் தரம் வாய்ந்த சாம்பியன்களுக்கு எதிரே தங்கள் குழந்தைகள் அமர்ந்து விளையாடியதைப் பார்த்தது அவர்களுக்கு பெருமையும் நிறைவும் அளித்தது.

ஐடிசி லிமிடெட். உணவுப் பிரிவின் ஸ்நாக்ஸ் & நூடுல்ஸ் சந்தைப்படுத்தல் தலைவர் அதுல் பூஜார் கூறுகையில், "உலக செஸ்ஸின் மிகப் பெரிய பெயர்களுக்கு எதிராக விளையாடிய இளம் பங்கேற்பாளர்களின் உற்சாகத்தையும் தன்னம்பிக்கையையும் காண்பது அற்புதமாக இருந்தது. இந்தியாவின் இளம் மனங்களை ஊக்குவித்து ஆதரிப்பது ஒரு பிராண்டாக எங்களின் தொடர்ச்சியான முயற்சியாகும். இந்தக் குழந்தைகள் தங்கள் கனவுகளுக்கு இன்னும் அருகில் செல்ல எங்களால் ஒரு சிறிய பங்களிப்பை வழங்க முடிந்ததில் மகிழ்ச்சி அடைகிறோம்."

யிப்பீ!-யின் குக். ஷேர். செக்மேட்! போட்டியின் மூலம் இந்த வாய்ப்பு உருவாக்கப்பட்டது. ஆகஸ்ட் 26 முதல் செப்டம்பர் 2 வரை பெங்களூரு மற்றும் சென்னையில் நடைபெற்ற இந்தப் போட்டியில், 13 முதல் 19 வயதுக்குட்பட்ட செஸ் ஆர்வலர்கள் ஒரு கிண்ணம் யிப்பீ! நூடுல்ஸைத் தயாரித்து, தங்களுக்கு மறக்க முடியாத ஒரு செஸ் தருணத்தைப் பகிர அழைக்கப்பட்டனர். அவர்களில் இருந்து 25 இறுதிப் போட்டியாளர்கள் செக்மேட் சேலஞ்ச்-க்கு தேர்வு செய்யப்பட்டனர். செஸ் பலகையின் ஒவ்வொரு நகர்வுக்கும் அப்பால் இருக்கும் ஆர்வம், கதைகள் மற்றும் அனுபவங்களைக் கொண்டாடும் யிப்பீ!-யின் #பியாண்ட்திமூவ் பிரச்சாரத்தின் ஒரு பகுதியாகவும் இந்த முயற்சி அமைந்துள்ளது.

# எதிர்க்கட்சி எம்எல்ஏக்களின் அவதூறு பேச்சால் தெலங்கானா சட்டசபையில் கதறி அழுத சபாநாயகர்: காங்கிரஸ் ஆட்சிக்கு எதிராக பி.ஆர்.எஸ் போராட்டம்

சென்னை 09, செப்டம்பர் 2026: தெலங்கானா சட்டசபையில் எதிர்க்கட்சி எம்.எல்.சி. தகாத வார்த்தைகளால் பேசியதாகக் கூறி சபாநாயகர் கண்ணீர் விட்டு அழுத சம்பவம் அம்மாநில அரசியலில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. தெலங்கானா சட்டசபை கூட்டத்தொடர் நடைபெற்று வரும் நிலையில், தேர்தல் வாக்குறுதிகளை காங்கிரஸ் அரசு நிறைவேற்றவில்லை எனக் கூறி பாரத் ராஷ்டிர சமிதி (பி.ஆர்.எஸ்.) கட்சியினர் கறுப்பு உடை அணிந்து சட்டசபைக்குள் நுழைய முயன்றனர். அப்போது அவர்களை பாதுகாப்புப் படையினர் தடுத்து நிறுத்தியதால் கடும் வாக்குவாதம் உருவானது.

இதையடுத்து கே.டி.ராமராவ், ஹரிஷ் ராவ் உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகளை போலீசார் குண்டுக்கட்டாக கைது செய்தனர். இதற்கிடையே அவைக்குள் பி.ஆர்.எஸ். கட்சியைச் சேர்ந்த மேலவை உறுப்பினர் தாடா மது, சபாநாயகர் கட்டம் பிரசாத் குமாரை ஒருமையில் பேசி அவதூறு பரப்பியதாக காங்கிரஸ் தரப்பில் குற்றம் சாட்டப்பட்டது. இதனால் மிகுந்த மனவேதனை அடைந்த சபாநாயகர் பிரசாத் குமார், அவையிலேயே இருக்கையில் அமர்ந்தபடி கண்ணீர் வடித்து கதறி அழுதார்.

இந்த சம்பவத்திற்கு கடும் கண்டனம் தெரிவித்த முதல்வர் ரேவந்த் ரெட்டி, 'இது தெலங்கானாவின் வரலாற்றில் மிக இருண்ட நாள்; 4 கோடி மக்களுக்கும் இழைக்கப்பட்ட பெரும் அவமானம்' என்று ஆவேசமாகக் கூறினார்.

தொடர்ந்து பேசிய முதல்வர் ரேவந்த் ரெட்டி, 'சபாநாயகரின் குடும்பத்தினரையும் தரக்குறைவாக பேசியிருப்பது ஒருபோதும் மன்னிக்க முடியாத குற்றம்; அரசியலமைப்பு பதவியில் உள்ள தலித் தலைவரை அவமதித்ததை ஜனநாயக சமூகம் ஏற்காது' என்று ஆவேசமாக பேசினார். ஆனால் இந்த குற்றச்சாட்டை பி.ஆர்.எஸ். கட்சியின் தாடா மது திட்டவட்டமாக மறுத்துள்ளார். இதனிடையே போராட்டம் குறித்து பி.ஆர்.எஸ். செயல் தலைவர் கே.டி.ராமராவ் கூறுகையில், 'காங்கிரஸ் கட்சி 100 நாட்களில் நிறைவேற்றுவதாக பாண்ட் பேப்பரில் எழுதிக் கொடுத்த 420 வாக்குறுதிகளில், ஆட்சிக்கு வந்து 1,000 நாட்கள் ஆகியும் ஒன்றைக்கூட நிறைவேற்றாமல் மக்களை ஏமாற்றிவிட்டது' என்று குற்றம் சாட்டினார். இந்த திடீர் தர்ணா போராட்டத்தால் சட்டசபை வளாகப் பகுதியில் சுமார் 40 நிமிடங்கள் வரை கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

# 2020ம் ஆண்டு திருவல்லிக்கேணி பகுதியில் மதுபோதையில் இருசக்கர வாகனம் ஓட்டிச் சென்று ஆட்டோ ஓட்டுநர் மீது மோதி உயிரிழப்பை ஏற்படுத்திய நபருக்கு 1 வருடம் கடுங்காவல் தண்டனை மற்றும் ரூ.16,000/- அபராதம் விதித்து கனம் நீதிமன்றம் தீர்ப்பு

சென்னை 09, செப்டம்பர் 2026: 25.10.2020ஆம் தேதி இரவு கிஷோர், வ/35/2020 என்பவர் தனக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தை மது போதையில் அதிவேகமாகவும் கவனக்குறைவாகவும், சென்னை, அண்ணா சாலை தாராபூர் டவர், குரோமா ஷோரும் அருகே ஓட்டி சென்று அதே சாலையில் ஓரமாக ஆட்டோவை நிறுத்திவிட்டு சவாரிக்காக நின்றிருந்த ஆட்டோ ஓட்டுநர் ராஜா வி/45, த/பெ கோவிந்தசாமி என்பவர் மீது மோதி விபத்து ஏற்படுத்தினார். இதில் ஆட்டோ ஓட்டுநர் ராஜாவுக்கு பலத்த காயம் ஏற்பட்டு பின்னர் பொதுமக்கள் உதவியுடன் 108 ஆம்புலன்ஸ் மூலம் இராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையில் இருந்த ராஜா என்பவர் சிகிச்சை பலனின்றி 27.10.2020 அன்று மரணமடைந்தார். மேற்படி விபத்து சம்மந்தமாக டி-1 திருவல்லிக்கேணி போக்குவரத்து புலனாய்வு பிரிவு (இதற்கு முன்பு டி - 6 அண்ணா ஸ்கொயர் டிஐடபிள்யு) காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்து எதிரி கிஷோர் கைது செய்யப்பட்டார்.

இவ்வழக்கின் விசாரணை முடித்து, எழும்பூர் கனம் 6வது குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு வழக்கு விசாரணை நடைபெற்று வந்த நிலையில், இவ்வழக்கில் நீதிமன்ற விசாரணை முடிந்து நேற்று முன்தினம் (07.09.2026) தீர்ப்பு வழங்கப்பட்டது.

எதிரி கிஷோர், வ/35/2020, த/பெ.இராலால் என்பவர் மீது குற்றம் நிரூபிக்கப்பட்டதால், உயிரிழப்புக்கு காரணமான கிஷோர் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டு, 1 வருடம் கடுங்காவல் சிறை தண்டனை மற்றும் ரூ.16,000/- அபராதம் விதித்து கனம் நீதிமன்ற நடுவர் அவர்கள் தீர்ப்பு வழங்கினார்.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

# நடிகரும் இயக்குநருமான ரிஷப் ஷெட்டி வெளியிட்ட 'பிக்காசோ' படத்தின் ஃபர்ஸ்ட் லுக்!

சென்னை 09, செப்டம்பர் 2026: கன்னட திரையுலகின் முன்னணி நட்சத்திரமான டாக்டர் சிவராஜ்குமார் மற்றும் இளம் தலைமுறையின் கவனம் பெற்ற நடிகர் அபிஷன் ஜீவிந்த் இணைந்து நடிக்கும் புதிய படத்தின் தலைப்பும், ஃபர்ஸ்ட் லுக்கும் வெளியாகியுள்ளது. 'பிக்காசோ' என பெயரிடப்பட்டுள்ள இப்படத்தின் ஃபர்ஸ்ட் லுக்கை நடிகரும் இயக்குநருமான ரிஷப் ஷெட்டி வெளியிட்டார்.

டிராமா கம்பெனி வழங்கும் இப்படத்தின் மூலம் கவுதம் சிவராமன் இயக்குநராக அறிமுகமாகிறார். பழம் பெரும் நட்சத்திரமான டாக்டர் சிவராஜ் குமாரின் தனித்துவமான திரை ஆளுமையுடன், அடுத்த தலைமுறை கலைஞரான அபிஷன் ஜீவிந்த்தின் புதிய தலைமுறை நடிப்புத் திறன் இணையும் இப்படம், ரசிகர்கள் மத்தியில் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

வித்தியாசமான காட்சியமைப்புடன் வெளியாகியுள்ள 'பிக்காசோ' படத்தின் ஃபர்ஸ்ட் லுக் அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளது. டாக்டர் சிவராஜ்குமாரும் அபிஷன் ஜீவிந்த்தும் பாரம்பரிய வெள்ளை உடையில், வெடித்த பட்டாசுகளின் நடுவே அமர்ந்திருக்கும் வகையில் இந்த ஃபர்ஸ்ட் லுக் வடிவமைக்கப்பட்டுள்ளது. இருவரின் இயல்பான, குறும்புத்தனமான தோற்றமும், அவர்களைச் சுற்றியுள்ள வெடித்த பட்டாசுகளும் மாறுபட்ட காட்சியமைப்பை உருவாக்குகின்றன.




மேலும், 'பிக்காசோ' என்ற தலைப்பு கையால் வரையப்பட்ட மஞ்சள் நிற எழுத்துக்களில் இடம்பெற்றிருப்பது ஃபர்ஸ்ட் லுக்கிற்கு கலைநயமிக்க தோற்றத்தை வழங்குகிறது. படத்தின் கதையும் வழக்கமான பாணியில் இல்லாமல் வித்தியாசமான அணுகுமுறையில் இருக்கும் என்ற எதிர்பார்ப்பையும் இந்த ஃபர்ஸ்ட் லுக் ஏற்படுத்தியுள்ளது.

இரண்டு வெவ்வேறு தலைமுறைகளை சேர்ந்த இரு நடிகர்களின் திரை இணைவு, 'பிக்காசோ' படத்தை சுவாரஸ்யமான திரைப்படமாக மாற்றியுள்ளது.

இப்படத்திற்கு கவுதம் சிவராமன் கதை எழுதி இயக்குகிறார். லியோன் ஜேம்ஸ் இசையமைக்கிறார். பிரகதீஷ் பிரபு ஒளிப்பதிவு செய்கிறார். சுரேஷ் படத்தொகுப்பு பணிகளை மேற்கொள்கிறார். ஸ்வாதி ராமகிருஷ்ணன் ஆடை வடிவமைப்பையும், விஜு விஜயன் கலை இயக்கத்தையும் கவனிக்கின்றனர்.

இப்படத்தில் ஷிவானி நாகரம் கதாநாயகியாக நடிக்கிறார். யோகலட்சுமி முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார். மேலும், பிரபல பாடகர் கானா வினோத் இப்படத்தின் மூலம் நடிகராக அறிமுகமாகிறார்.

டிராமா கம்பெனி சார்பில் ஏ. பாலமுருகன் இப்படத்தை தயாரிக்கிறார். ஆர். கார்த்திகேயன், தினேஷ் பாலச்சந்திரன் மற்றும் ஆர்.ஆர். தீபன் ராஜ் ஆகியோர் இணை தயாரிப்பாளர்களாக பணியாற்றுகின்றனர். கிரீன் காட் மற்றும் டி பிக்சர்ஸ் நிறுவனங்கள் தயாரிப்பில் இணைந்துள்ளன.

இப்படத்தின் படப்பிடிப்பு முழுமையாக நிறைவடைந்துள்ள நிலையில், தற்போது போஸ்ட் புரொடக்ஷன் பணிகள் நடைபெற்று வருகின்றன. வித்தியாசமான கதை மற்றும் காட்சியமைப்புடன் உருவாகியுள்ள 'பிக்காசோ' படத்தின் அடுத்தடுத்த அப்டேட்கள் மூலம் படத்தின் உலகம் குறித்த கூடுதல் தகவல்கள் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# மயிலாப்பூர் பகுதியில் பெண்ணை அழைத்துச் சென்று கத்தியால் தாக்கிய சரித்திர பதிவேடு குற்றவாளி கைது

சென்னை 09, செப்டம்பர் 2026: சென்னை, துரைப்பாக்கம் பகுதியில் கணவர் மற்றும் குழந்தைகளுடன் வசித்து வரும் 25 வயது பெண் ஒருவர் கடந்த 06.09.2026 அன்று வீட்டில் இருந்தபோது, அவருக்கு தெரிந்த நபரான அறிவழகன் என்பவர் அப்பெண்ணிடம் பேச வேண்டும் என ஆட்டோவில் அழைத்துச் சென்று, மயிலாப்பூர், பஷாத் தோட்டம், சாந்தோம் ரோடு பகுதிக்கு சென்று, அப்பெண்ணிடம் பேசிக் கொண்டிருந்த போது, அறிவழகன் அவதூறான மற்றும் ஆபாசமான வார்த்தைகளால் பேசி, தவறான உறவுக்கு அழைத்து கத்தியால் தாக்கியதாகவும், மேற்படி பெண் சத்தம் போடவே, அருகிலிருந்த பொது மக்கள் வருவதைக் கண்ட அறிவழகன் கத்தியை காட்டி கொலை மிரட்டல் விடுத்து தப்பிச் சென்றதாகவும், இரத்தக்காயமடைந்த மேற்படி பெண் இராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் நிலையில், மேற்படி சம்பவத்தில் கத்தியால் தாக்கி கொலை மிரட்டல் விடுத்த அறிவழகன் மீது உரிய நடவடிக்கை எடுக்கும்படி கொடுத்த புகார் மீது இ-1 மயிலாப்பூர் காவல் நிலையத்தில், பாரதிய நியாய சன்ஹிதா சட்டம் (பிஎன்எஸ் ஆக்ட்) மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டம் (திஎன்பிஹெச் டபிள்யு ஆக்ட்) உள்ளிட்ட பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

இ-1 மயிலாப்பூர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட எதிரி அறிவழகன், வ/32, பிருந்தாவனம் அபார்ட்மென்ட், ராக்கியப்பா தெரு, மயிலாப்பூர், சென்னை என்பவரை நேற்று முன்தினம் (07.09.2026) கைது செய்தனர். அவரிடமிருந்து குற்றச் செயலுக்கு பயன்படுத்திய 1 கத்தி பறிமுதல் செய்யப்பட்டது.இ-1 மயிலாப்பூர் காவல் நிலைய சரித்திர பதிவேடு குற்றவாளியான எதிரி அறிவழகன் மீது 1 கொலை, 2 கொலை முயற்சி உள்பட சுமார் 9 குற்ற வழக்குகள் உள்ளது. கைது செய்யப்பட்ட எதிரி அறிவழகன் என்பவர் விசாரணைக்குப் பின்னர் நேற்று முன்தினம் (07.09.2026) நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப் பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

# ஊட்டச்சத்து மாதம் முன்முயற்சிகள் மற்றும் அங்கன்வாடி அமைப்பை வலுப்படுத்துவது குறித்த கட்டுரையை பிரதமர் பகிர்ந்துள்ளார்

சென்னை 09, செப்டம்பர் 2026: மத்திய அமைச்சர் திருமதி அன்னபூர்ணா தேவி எழுதியுள்ள கட்டுரை ஒன்றை பிரதமர் திரு நரேந்திர மோடி பகிர்ந்துள்ளார்.

மாத்ரு வந்தனா யோஜனாவின் 10 ஆண்டுகள் நிறைவு மற்றும் ஊட்டச்சத்து மாதம் குறித்த இக்கட்டுரை, அங்கன்வாடி அமைப்பை மக்கள் இயக்கமாக மாற்ற வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைக்கிறது. நேரடி பலன் பரிமாற்றம், சமூக ஆய்வுகள் மற்றும் சத்தான உணவுகள் வாயிலாக குழந்தைகள், பெண்கள் மற்றும் வளரிளம் பெண்களுக்கு எவ்வாறு ஆதரவு அளிக்கப்படுகிறது என்பதை இக்கட்டுரை கோடிட்டுக் காட்டுகிறது. "நமது அங்கன்வாடி, நமது பொறுப்பு" என்ற தொலைநோக்குப் பார்வையின் கீழ் மேற்கொள்ளப்படும் இந்த முயற்சிகள், ஊட்டச்சத்து குறைபாடற்ற மற்றும் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதற்கான பாதையை அமைத்துத் தருகின்றன என்று அக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுகுறித்து சமூக ஊடக எக்ஸ் தளத்தில் பிரதமர் அலுவலகம் பதிவிட்டிருப்பதாவது:

"மாத்ரு வந்தனா யோஜனாவின் 10 ஆண்டுகள் மற்றும் ஊட்டச்சத்து மாதம் குறித்து மத்திய அமைச்சர் திருமதி அன்னபூர்ணா தேவி எழுதியுள்ள இக்கட்டுரை, அங்கன்வாடி அமைப்பை மக்கள் இயக்கமாக உருவெடுக்கச் செய்வதற்கான செய்தியை வழங்குகிறது. நேரடிப் பலன் பரிமாற்றம், சமூக ஆய்வுகள் மற்றும் சத்தான உணவு ஆகியவை குழந்தைகள், பெண்கள் மற்றும் வளரிளம் பெண்களுக்கு எவ்வாறு உறுதுணையாக இருக்கின்றன என்பதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இந்த முயற்சி 'நமது அங்கன்வாடி, நமது பொறுப்பு' என்ற தொலைநோக்குப் பார்வையுடன், ஊட்டச்சத்துக் குறைபாடற்ற, வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதற்கான வழியை வகுப்பதாக தெரிவித்துள்ளார்."

# திருச்சி கிழக்கு உள்ளிட்ட 5 தொகுதிகளுக்கு இடைத் தேர்தல் அறிவிக்க விதிக்கப்பட்ட தடை நீட்டிப்பு

சென்னை 09, செப்டம்பர் 2026: திருச்சி கிழக்கு உள்ளிட்ட 5 சட்டமன்ற தொகுதிகளுக்கு இடைத் தேர்தல் அறிவிக்க விதிக்கப்பட்டிருந்த இடைக்கால தடையை சென்னை ஐகோர்ட் நீட்டித்துள்ளது.

நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தலில் முதலமைச்சர் விஜய், பெரம்பூர் மற்றும் திருச்சி கிழக்கு ஆகிய 2 தொகுதிகளில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். இதையடுத்து திருச்சி கிழக்கு தொகுதி எம்.எல்.ஏ. பதவியை அவர் ராஜினாமா செய்தார். மேலும், கரூர் எம்.எல்.ஏ. எம்.ஆர். விஜயபாஸ்கர், விராலிமலை எம். எல்.ஏ. சி. விஜயபாஸ்கர், பெருந்துறை எம்.எல்.ஏ. ஜெயக்குமார், அம்பாசமுத்திரம் எம்.எல்.ஏ. இசக்கி சுப்பையா ஆகியோரும் தங்களது எம்.எல்.ஏ. பதவிகளை ராஜினாமா செய்தனர். இவர்களின் தேர்தல் வெற்றிக்கு எதிராக தேர்தல் வழக்குகள் நிலுவையில் உள்ளன.

இதனால் இந்த 5 தொகுதிகளிலும் இடைத்தேர்தல் அறிவிப்பை வெளியிட தடை விதிக்க கோரி பாளையங்கோட்டை பா.ஜ.க. கட்சியைச் சேர்ந்த வெங்கடாஜலபதி, சென்னை ஐகோர்ட்டில் பொது நல வழக்கு தாக்கல் செய்திருந்தார். இந்த வழக்கை விசாரித்த தலைமை நீதிபதி அமர்வு, 5 தொகுதிகளுக்கும் இடைத் தேர்தல் அறிவிக்க தடை விதித்து உத்தரவிட்டது. தேர்தல் ஆணையமும், தேர்தல் வழக்கு முடியும் வரை இடைத்தேர்தல் அறிவிக்கப்பட மாட்டாது என பதில் மனு தாக்கல் செய்திருந்தது.

இந்த வழக்கில் முதல்வர் விஜய் தரப்பில் பதில்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில் திருச்சி கிழக்கு தொகுதி வெற்றியை எதிர்த்து ஜூன் 17ம் தேதி தான் தேர்தல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. ஆனால் மே 10ம் தேதியே தொகுதி எம். எல்.ஏ. பதவியை தான் ராஜினாமா செய்து விட்டதாகவும்; ராஜினாமா செய்து, அதை சபாநாயகர் ஏற்ற நாளில் எந்த தேர்தல் வழக்கும் நிலுவையில் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மனு விசாரணைக்கு உகந்தது அல்ல மனுவைத் தாக்கல் செய்துள்ள மனுதாரர் சம்மந்தப்பட்ட தொகுதியில் தேர்தல் வழக்கு தொடர்ந்தவரோ அல்ல, வாக்காளரும் அல்ல. திருச்சி கிழக்கு தொகுதியில் மக்கள் பிரதிநிதி இல்லாமல் காலவரையின்றி இடைத்தேர்தலைத் தாமதப்படுத்தும் உள்நோக்கத்துடன் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக முதல்வர் விஜய் தெரிவித்துள்ளார். இதே போல் தடையை நீக்க கோரி முன்னாள் அமைச்சர்கள் சி.விஜயபாஸ்கர், எம். ஆர். விஜயபாஸ்கர், அம்பாசமுத்திரம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் இசக்கி சுப்பையா உள்ளிட்டோரும் மனு தாக்கல் செய்திருந்தனர்.

28ம் தேதி இறுதி விசாரணை

இந்த வழக்கு இன்று மீண்டும் தலைமை நீதிபதி அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது பெருந்துறை முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஜெயக்குமார் சார்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் முரளிதர், ஜெயக்குமார் வெற்றியை எதிர்த்து தொடரப்பட்ட தேர்தல் வழக்கு நிராகரிக்கப்பட்டதாகவும் எனவே தடையை நீக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். தேர்தல் ஆணையம் சார்பாக வழக்கறிஞர் நிரஞ்சன் உத்தரவு நகல் கிடைக்கப்பெறவில்லை என்றும் வந்தபின் சமர்ப்பிப்பதாக தெரிவித்தார்.

அனைத்து வாதங்களை கேட்ட நீதிபதிகள், இடைக்கால தடையை நீட்டித்து உத்தரவிட்டனர். மேலும் இந்த வழக்கின் இறுதி விசாரணை வரும் 28ம் தேதி நடைபெறும் என தெரிவித்துள்ளனர்.

பெருந்துறை தொகுதி வழக்கு நிராகரிப்பு

பெருந்துறை தொகுதியில் தி.மு.க. சார்பில் போட்டியிட்ட தோப்பு வெங்கடாசலம், ஜெயக்குமாரின் வெற்றியை எதிர்த்து சென்னை ஐகோர்ட்டில் தேர்தல் வழக்கு தாக்கல் செய்திருந்தார். இந்த வழக்கை நிராகரிக்கக் கோரி ஜெயக்குமார் தரப்பில் மனுத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த மனுவை இன்று விசாரித்த நீதிபதி டி. பரதசக்கரவர்த்தி, தோப்பு வெங்கடாசலம் தாக்கல் செய்த தேர்தல் வழக்கில் சட்டப்படி அனுமதிக்கப்பட்ட எந்த காரணங்களும் இல்லை எனக்கூறி, ஜெயக்குமாரின் மனுவை ஏற்று, தோப்பு வெங்கடாசலத்தின் தேர்தல் வழக்கை நிராகரித்து உத்தரவிட்டுள்ளார்.

# தி.மு.க. ஆட்சியில் ரூ.2,000 கோடி முறைகேடு: முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு மீது அமைச்சர் ஆதவ் அர்ஜுனா உரிமை மீறல் புகார்

சென்னை 09, செப்டம்பர் 2026: கடந்த தி.மு.க. ஆட்சியில் ரூ.2,000 கோடி பணிகளுக்கு முன்கூட்டியே நிர்வாக அனுமதி வழங்கியது தொடர்பாக முன்னாள் அமைச்சர் எ.வ. வேலு மீது சட்டசபையில் அமைச்சர் ஆதவ் அர்ஜுனா உரிமை மீறல் எழுப்பினார்.

சட்டசபையில் தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் வெளியேற்றப்பட்டபின், பொதுப்பணித் துறை மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா, முன்னாள் அமைச்சரும், திமுக கொறடாவுமான எ.வ.வேலு குறித்த குற்றச்சாட்டை முன் வைத்தார்.

ஆதவ் அர்ஜுனா பேசியதாவது:

"சட்டசபையின் உரிமை மீறல் பிரச்னையை நாங்கள் கொண்டு வந்தோம். தமிழ்நாடு சட்டசபை விதிகளின் கீழ் முன்னாள் அமைச்சர் மற்றும் இன்றைய எம்எல்ஏ ஏ.வ.வேலு 2021 - 2026ம் கால கட்டத்தில் நெடுஞ்சாலை மற்றும் பொதுப் பணி துறை அமைச்சராக இருந்தபோது 14.1.2026 நாளிட்ட அரசாணை எண் 06 மூலம் 2026-27ம் ஆண்டிற்கான சிஆர்ஐடிபி திட்டத்தின் கீழ் 80 பணிகளுக்கு ரூ.2000 கோடி முன் கூட்டிய நிர்வாக அனுமதி வழங்கப் பட்டு, அத்தொகை 2026-27ல் மொத்த திட்ட அனுமதிக்குள் சரிசெய்யப்படும் என உத்தரவிடப்பட்டுள்ளது.

ஆனால் அந்த நேரத்தில் அந்த மானிய கோரிக்கைக்கள் சட்டசபையில் அப்போது வாக்களிக்கப்பட்டு நிறைவேற்றப்படவில்லை. இருப்பினும் இப்பணிகளுக்கு ஒப்பந்தங்கள் கோரப்பட்டு 2025-26 நிதியாண்டிலே 80 பணி ஆணைகளும் வழங்கப்பட்டு எதிர் கால பட்ஜெட் புரொவிஷன் மீது ரூ.2000 கோடி கமிட்டட் லயபிலிட்டி உருவாக்கப்பட்டுள்ளது. இது சட்டமன்ற நடைமுறைக்கு எதிரானது.

சட்டமன்றத்தில் ஒப்புதல் இல்லாமலேயே அடுத்த தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்துவிடுவோம் என்ற நம்பிக்கையில் எதிர்கால பட்ஜெட்டில் இருந்து ரூ.2000 கோடியை ஒதுக்கியுள்ளனர்.

இதனால் மானிய கோரிக்கையை பரிசீலித்து அனுமதி வழங்கும் சட்டசபையின் அதிகாரம் செயல்முறையில் பறிக்கப்பட்டுள்ளது. எனவே இந்த பொறுப்பற்ற செயல் குறித்த அறிக்கையை ஆய்வுக்கு சட்டமன்றம் அனுப்ப வேண்டும் என கோருகிறேன்" என தெரிவித்தார்.



இதைத் தொடர்ந்து சபாநாயகர் ஜேசிடி பிரபாகர் பேசுகையில் இந்த உரிமை மீறல் தொடர்பாக ஆய்வு செய்து எந்த விதியின் கீழ் நடவடிக்கை எடுக்கலாம் என்பதை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார்.

# "முதல்வர் விஜய் தலைமையில் நடைபெறும் தவெக கூட்டணி கூட்டத்தில் மார்க்சிஸ்ட் பங்கேற்காது": செயலாளர் சண்முகம் பேட்டி

சென்னை 09, செப்டம்பர் 2026: ''முதலமைச்சர் விஜய் தலைமையில் இன்று (9ந் தேதி) நடைபெறும் தமிழக வெற்றிக்கழகம் (தவெக) தலைமையிலான கூட்டணி கூட்டத்தில் மார்க்சிஸ்ட் பங்கேற்காது. தவெகவின் நிலைப்பாட்டைப் பொருத்து அரசுக்கு ஆதரவு தொடரும்'' என்று மார்க்சிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பெ. சண்முகம் தெரிவித்தார்.

த.வெ.க. ஆதரவு கட்சிகளின் 2-வது கூட்டம் சென்னையில் நநடைபெற வுள்ளது. இதையொட்டி த.வெ.க. ஆட்சியமைக்க ஆதரவளித்துள்ள மற்றும் கூட்டணியில் உள்ள கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. தவெக ஆட்சியமைக்க வெளியிலிருந்து ஆதரவு அளித்துள்ள கம்யூனிஸ்ட் மற்றும் மார்க்சிஸ்ட் ஆகிய கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. முதல் கூட்டத்தில் இவ்விரு கட்சிகளும் கலந்துகொள்ளாத நிலையில், இந்த கூட்டத்தில் பங்கேற்பது குறித்து இரு கட்சிகளின் நிர்வாகிகளும் இன்று தனித்தனியாக ஆலோசனை மேற்கொண்டனர்.

ஆலோசனைக் கூட்டத்திற்குப் பிறகு செய்தியாளர்களிடம் பெ.சண்முகம் கூறியதாவது: தவெக தலைமையில் கூட்டணியை உருவாக்குவது, அதற்கான செயல்திட்டம் உருவாக்குவது, இடைத் தேர்தல், உள்ளாட்சித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் கூட்டணி பற்றி பேசவும் தவெக கூட்டணி கூட்டத்திற்கு அமைச்சர்கள் அழைப்பு விடுத்தனர்.

இன்று (9ந் தேதி) நடைபெறும் தவெக கூட்டணி தொடர்பான கூட்டத்தில் மார்க்சிஸ்ட் கட்சி பங்கேற்காது. தவெக அரசுக்கு வெளியில் இருந்து ஆதரவு தொடரும். தமிழக மக்களின் நலன் கருதி, உழைப்பாளர்களின் நலன் கருதி அரசுக்கு ஆலோசனைகளை வழங்குவோம். ஏற்பதும் நிராகரிப்பதும் அவர்கள் விருப்பம். சட்டமன்றம் என்பது சண்டை மன்றமாக இருக்கிறது.

வரிப்பணம் விரயம் ஆகக்கூடாது. சட்டமன்றம் முறையாக நடப்பதில் ஆளும்கட்சி, பணத்தில் நடக்கிறது. அது விரயம் ஆகக்கூடாது. இவ்வாறு அவர் கூறினார்.

கூட்டணியில் இல்லை: பாலகிருஷ்ணன் பேட்டி

விழுப்புரம் மாவட்டம் திண்டிவனத்தில் மார்க்சிஸ்ட் கட்சியின் முன்னாள் மாநில செயலாளர் பாலகிருஷ்ணன் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் பேசுகையில், எந்த சூழ்நிலையிலும் நாங்கள் அமைச்சரவையில் இடம் பெற மாட்டோம். நாளை கூட்டணி தொடர்பாக, கூட்டம் வைத்திருக்கிறார்கள் நாங்கள் அந்த கூட்டத்திற்கு செல்ல போவதில்லை. தி.மு.க., த.வெ.க. என நாங்கள் எந்த கூட்டணியிலும் இல்லை. இடதுசாரி கட்சிகள் இணைந்து செயல்பட ஆரம்பித்துள்ளோம். அடுத்த மாதம் திருச்சியில் மிகப்பெரிய பேரணி நடத்த உள்ளோம். தேர்தல் வரும்போது அப்பொழுது உள்ள சூழலுக்கு ஏற்ற போல் முடிவு செய்வோம். இடைத்தேர்தல் நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் பிறகு கலந்து பேசி முடிவு செய்வோம். இவ்வாறு அவர் கூறினார்.

பாலன் இல்லத்தில் ஆலோசனை

இதேபோல சென்னை தி.நகர் பாலன் இல்லத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில நிர்வாகக் குழு கூட்டம் நடைபெற்று வருகிறது. இக்கூட்டத்தில் முதலமைச்சர் விஜய் தலைமையில் நாளை நடைபெறும் கூட்டணி கட்சிகளின் ஆலோசனை கூட்டத்தில் பங்கேற்பது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

தவெக தோழமைக் கட்சிகள் கூட்டத்தில் காங்கிரஸ், விசிக, ஐயூஎம்எல் உள்ளிட்ட கட்சிகள் பங்கேற்கவுள்ளதாக ஏற்கனவே அறிவித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தி.மு.க.வினர் செய்த செயல் எனக்கு வருத்தத்தை அளிக்கிறது. தி.மு.க.வினரை வெளியேற்றியது ஏன்? சபாநாயகர் ஜே.சி.டி. பிரபாகர் விளக்கம், அமைதியாக இருந்த எடப்பாடிக்கு பாராட்டு

சென்னை 09, செப்டம்பர் 2026: தி.மு.க. உறுப்பினர்களை சட்டசபையிலிருந்து வெளியேற்றியது ஏன்? என்பது குறித்து சபாநாயகர் ஜே.சி.டி. பிரபாகர் விளக்கம் அளித்தார்.

சட்டப்பேரவையில் நேற்றைய தினம் முதலமைச்சர் பேசிய கருத்துகளை அவை குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென திமுகவினர் தொடர் அமளியில் ஈடுபட்டனர். சபாநாயகர் உத்தரவையும் மீறி தி.மு.க.வினர் தொடர் அமளியில் ஈடுபட்டு சபாநாயகரை முற்றுகையிட்டு தர்ணா போராட்டம் நடத்தி கூச்சலிட்டனர். அவர்களை இருக்கைக்கு சென்று அமரும்படி சபாநாயகர் பலமுறை எச்சரித்தும் அவர்கள் தொடர்ந்து போராட்டம் நடத்தினர். இதனால் திமுக உறுப்பினர்களை வெளியேற்றும்படி அவை காவலர்களுக்கு சபாநாயகர் உத்தரவிட்டார். இதனைத் தொடர்ந்து தி.மு.க. உறுப்பினர்களை அவை காவலர்கள் வெளியேற்றினர்.

இதைத் தொடர்ந்து தி.மு.க. உறுப்பினர்களை வெளியேற்றியது ஏன்? என்பதற்கான காரணத்தை சபாநாயகர் ஜேசிடி பிரபாகர் விளக்கினார்.

அப்போது அவர் கூறியதாவது:

சட்டசபையில் நடைபெறுவதை உலகம் முழுவதும் இருக்கும் தமிழ் மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். கட்சி ரீதியாக யாருக்கு என்ன பயிற்சிகள் வழங்கப்பட்டிருக்கிறது? என்பது இன்று தெளிவாக தெரிய வருகிறது. கடந்த ஞாயிற்றுக் கிழமை எனக்கு குறைவான ரத்த அழுத்தும் ஏற்பட்டு உடல்நிலை சரியில்லாமல் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தேன். மருத்துவர்கள் என்னை ஓய்வெடுக்க சொன்னார்கள். அதையும் மீறி முதலமைச்சரின் பதிலுரையின்போது நான் பேரவையில் இருக்க வேண்டும் என்பதற்காகவே பேரவைக்கு வந்து அமர்ந்தேன். சபையில் நடந்த நிகழ்வுகளால் எனக்கு ரத்த அழுத்தம் உயர்ந்து, மருத்துவரே இல்லாமல் ரத்த அழுத்தம் சரியாகியிருக்கிறது.

அவையை நடத்த விடாமல் தடுக்க முயற்சி

இப்போதும் என் மீது என்ன தவறு இருக்கும் என்று சிந்தித்துப் பாருங்கள். திமுகவினரை பேச அனுமதித்தது ஒன்றுதான் குற்றமா? சட்டத்துறை அமைச்சர், அவை முன்னவர் மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் ஆகியோர் விரிவான பதிலை அளித்தார்கள். அவை குறிப்பிலிருந்து முதலமைச்சர் பேசியதை நீக்க முடியாது என்ற காரணத்தை தெளிவாக சொல்லி விட்டேன். அவர் விதிகளுக்கு புறம்பாக எதையும் பேசவில்லை. விதிகளுக்கு உட்பட்டு தகுந்த ஆதாரங்களை மட்டுமே வெளியிட்டு பேசினார்.

மூத்த முன்னாள் அமைச்சர்களை கொண்டிருக்கும் ஒரு கட்சி (தி.மு.க.). சட்டமன்றத்தில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்ற மாண்பை தெரிந்த ஒரு கட்சி. அக்கட்சியின் உறுப்பினர்கள் சபையை நடத்த விடாமல் தடுக்க வேண்டும் என்ற உள்நோக்கத்தை மட்டுமே காண்பிப்பதாக அவர்கள் நடவடிக்கை இருந்ததால் அவர்களை வெளியேற்றுங்கள் என்று சொல்வதைத் தவிர வேறு எந்த ஆப்ஷனும் எனக்கு இல்லை. அவையை நடத்த விடாமல் தடுத்தால் நான் என்ன செய்ய முடியும்? இன்று 1.30 மணிக்குள் அவையை முடிக்க வேண்டும் என்று நோக்கத்தில் இருக்கும் பொழுது இந்த அவையை மேற் கொண்டு நடத்த விடாமல் தடுக்க முயற்சி செய்தார்கள். திமுக உறுப்பினர்கள் செய்த செயல்தான் எனக்கு வருத்தத்தை அளிக்கிறது.

எடப்பாடிக்கு பாராட்டு



மேலும், "ஆளுங் கட்சி உறுப்பினர்கள் தொடர்ந்து அமைதி காத்தீர்கள். இதுதான் உங்கள் தலைவர் உங்களுக்கு கற்றுத் தந்திருக்கிற நல்ல பண்பு. முன்னாள் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி பேரவையில் என்னதான் நடக்கும் நடக்கட்டுமே என்று அமைதியாக பார்த்துக் கொண்டிருந்தார். அவருக்கு பாராட்டுகள். நான் திமுகவினரை வெளியேற்றியது சரிதான். எனக்கு அவை மாண்பு தான் முக்கியம். நமக்கு மட்டுமே பதில் சொல்ல வேண்டிய அவையில் நாம் இல்லை. நாட்டு மக்களுக்கும் பதில் சொல்ல வேண்டிய அவையில் நாம் இருக்கிறோம். நாட்டு மக்கள் என்ன நினைப்பார்கள்.

இவ்வாறு அவர் பேசினார்.

இதனை தொடர்ந்து பொதுப்பணித்துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா பேசுகையில், "அண்ணாவின் வழியில் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பதற்கிணங்க நாம் எப்பொழுதும் பேரவையில் சபாநாயகர் பேச்சுக்கு கட்டுப்பட்டு செயல்படுவோம். முதலமைச்சர் வழியில் பேரவையின் மாண்பை எப்பொழுதும் நாங்கள் பின்பற்றுவோம் என்பதை சபாநாயகருக்கு தெரிவித்துக் கொள்கிறேன்" என்றார்.

# சட்டசபையில் முதன்முறையாக மாற்றுத்தலைவராக செயல்பட்ட அ.தி.மு.க. எம்.எல்.ஏ. தளவாய்சுந்தரம்

சென்னை 09, செப்டம்பர் 2026: சட்டசபையில் முதன்முறையாக அண்ணா தி.மு.க. உறுப்பினர் தளவாய் சுந்தரம் மாற்றுத்தலைவராக செயல்பட்டு சபையை வழிநடத் தினார்.

தமிழக சட்டசபை பட்ஜெட் கூட்டத் தொடர் நேற்றுடன் (செவ்வாய்கிழமை) நிறைவடைகிறது. பொதுவாக, சட்டசபையை சபாநாயகர் நடத்துவார். அவர் இல்லாத நேரத்தில் துணை சபாநாயகர் அவையை நடத்துவார். இருவரும் அவையில் இல்லாத நேரத்தில் மாற்றுத் தலைவர்களில் ஒருவர் அவையை நடத்துவார்கள்.



அந்த வகையில், புதிதாக ஆட்சி பொறுப் பேற்றுள்ள த.வெ.க. அரசில், சட்டசபை மாற்றுத் தலைவர்கள் பட்டியலில் எதிர்க் கட்சியினருக்கும் இடம் கொடுக்கப்பட்டுள்ளது. கடந்த கால தி.மு.க., அ.தி.மு.க. ஆட்சிகளில், கூட்டணி கட்சிகளுக்கு மாற்றுத் தலைவர்கள் பொறுப்பு வழங்கப்பட்டதே தவிர, எதிர்க்கட்சிகளுக்கு வாய்ப்பு வழங்கப்படுவதில்லை.

த.வெ.க. அரசு இந்த நடைமுறையை மாற்றியமைத்த நிலையில், சட்டசபை நிறைவு நாளான நேற்று சபாநாயகர், துணை சபாநாயகர் இல்லாத நேரத்தில் மாற்றுத் தலைவரான அண்ணா தி.மு.க. எம்.எல்.ஏ. தளவாய் சுந்தரம் அவையை நடத்தினார்.

சபாநாயகர் இருக்கையில் நடுநிலையோடு சபையை வழி நடத்தினார்.